# அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுமதிப்பீட்டில் A+ (CGPA : 3.64) தகுதிபெற்றது)

நாள்: 27.02.2018

## ரயில்வேதேர்வுக்கான இலவசசிறப்புப் பயிற்சிவகுப்புகள்

தமிழ்நாட்டில் ரயில்வே துறையில் காலியாக உள்ள அசிஸ்டண்ட் லோகோபைலட் & டெக்னிஷியன் பதவிக்கான 945 காலிப்பணியிடங்களும் மற்றும் குருப்-டி பதவிக்கான 2,979 காலிப்பணியிடங்களும் எழுத்து மற்றும் உடற்தகுதி தேர்வின் மூலம் நிரப்பப்பட உள்ளன.

இத்தேர்வுகளுக்கான இலவச சிறப்புப் பயிற்சி அழகப்பா பல்கலைக்கழகத் தன்னார் வப்பயிலும் வட்டத்தின் மூலம் நடத்த திட்டமிட்டுள்ளது. இதற்கான பயிற்சிவகுப்புகள் 03/03/2018ம் தேதி முதல் தொடங்க இருக்கின்றன. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு வேலை நாடுநர்கள் பயன்பெறும் வகையில் இலவசப்பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதில் ரயில்வே தேர்வுக்கான பாடத்திட்டங்கள், தேர்வு விவரங்கள், தேர்வு நடத்தப்படும் முறை ஆகியவை குறித்த அனைத்து தகவல்கள் மற்றும் எவ்வாறு தேர்வை எதிர்கொள்ள ஆயத்தமாக வேண்டும் என்பது தொடர்பான தகவல்கள், தேர்வில் வெற்றி கண்டவர்களின் அனுபவப்பகிர்வு மற்றும் இத்தேர்வுக்கான பல்வேறு பிரிவுகளில் பயிற்சியளிக்கும் அனுபவமிக்க வல்லுநர்களை இனம் கண்டு அவர்கள் மூலம் பயிற்சிகள் மற்றும் மாதிரித் தேர்வுகள் நடத்தப்பட உள்ளது.

இத்தேர்விற்கு விண்ணப்பித்தவர்கள் 04565-223266 என்ற தொலைபேசியிலோ அல்லது 88707-81897 என்ற அலைபேசியிலோ தொடர்புகொண்டு அல்லது alagappauniversitystudycircle@gmail.com என்ற மின் அஞ்சல் மூலமாகவோ தங்கள் விவரங்களைத்தெரிவித்து தங்கள் வருகையை உறுதி செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தேர்வுக்கான வகுப்புகள் L.CT.P.L பழனியப்பா நினைவரங்கத்தின் தரைத்தளத்தில் இயங்கிவரும் அழகப்பா தன்னார்வ பயிலும் வட்டத்தில் (Alagappa University Study Circle) நடைபெறும் என பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவிக்கிறார்.

பேரா. ஹா. குருமல்லேஷ் பிரபு

பதிவாளர்